# கொடைக்கானல் நகராட்சி

2021ம் ஆண்டு அக்டோபர் மாதம் 13ஆம் நாள் (13.10.2021) புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றக் கூடத்தில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் அசவரக் கூட்டம்.

முன்னிலை: த. நாராயணன், பி.எஸ்.சி., எம்.பி.ஏ.,
தனி அலுவலர்.

1) அரசாணை நிலை எண். 70 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 13.9.2021 ன்படி, கொடைக்கானல் நகராட்சி பகுதியில் உள்ள மண் சாலைகளை தார்ச்சாலை மற்றும் சிமிண்ட் சாலையாக மாற்றம் செய்திட கீழ்க்கண்டவாறு மதிப்பீடு தயார் செய்யபட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விபரம் | நீளம் மீட்டரில் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில |
|---|---|---|---|
| 1 | வார்டு எண். 3 –எஸ்.வி. உறாட்டல் மண் சாலையினை சிமிண்ட் சாலையாக மாற்றுதல் (Unicode No :079003R20) | 300.00 | 55.00 |
| 2 | வார்டு எண். 4– ஆண்டவர்பாதம் மண் சாலையினை தார்ச்சாலை மற்றும் சிமிண்ட் சாலையாக அமைத்தல் (Unicode No 079004R33) | 170.00 | 38.00 |
| 3 | வார்டு எண்.4–கான்வெண்ட் மண் சாலையினை சிமிண்ட் சாலையாக மாற்றுதல் (Unicode No :079004R22) | 400.00 | 85.00 |
| 4 | வார்டு எண். 17– அப்சர்வேட்டரி வி.ஜி.பி மண் சாலையினை சிமிண்ட் சாலை மற்றும் தார்ச்சாலையாக மாற்றுதல் (Unicode No 079017R124) | 267.00 | 70.00 |
| 5 | வார்டு எண். 18– அப்சர்வேட்டரி வைடீரா மண் சாலையினை தார்ச்சாலை மற்றும் சிமிண்ட் சாலையாக மாற்றுதல் (Unicode No 079018R139) | 1900.00 | 250.00 |
| 6 | வார்டு எண். 17–பெய்ரிபால்ஸ் ஆனந்த ஆஸ்ரமம் மண் சாலையில் தடுப்புச் சுவர் மற்றும் சிமிண்ட் சாலை அமைத்தல் (Unicode No :07900R117) | 288.00 | 95.00 |
| 7 | வார்டு எண். 17–பெய்ரிபால்ஸ் ஆனந்த ஆஸ்ரமம் 1வது குருக்கு மண் சாலையில் சிமிண்ட் சாலை அமைத்தல் (Unicode No :07900R119) | 57.00 | 14.00 |
| 8 | வார்டு எண். 17–பெய்ரிபால்ஸ் ஆனந்த ஆஸ்ரமம் இரண்டாம் குருக்கு மண் சாலையில் சிமிண்ட் சாலை அமைத்தல் (Unicode No :07900R118) | 36.00 | 10.00 |
| 9 | வார்டு எண். 17–பெய்ரிபால்ஸ் ஆனந்த ஆஸ்ரமம் மூன்றாவது குருக்கு மண் சாலையில் சிமிண்ட் சாலை அமைத்தல் (Unicode No :07900R120) | 216.00 | 47.00 |
| 10 | வார்டு எண். 18– எரோட்டா முதல் கீழ்புதுக்காடு வரை உள்ள மண் சாலையில் தார்ச்சாலை மற்றும் சிமிண்ட் சாலை அமைத்தல் (Unicode No 079018R138) | 1250.00 | 130.00 |
| 11 | வார்டு எண். 22– நாய்ஸ் சாலையில் சிமிண்ட் சாலை அமைத்தல் (Unicode No :079022S62) | 55.00 | 9.00 |
| 12 | வார்டு எண். 24– இருதயபுரம் குருக்கு சாலையில் சிமிண்ட் சாலை அமைத்தல் (Unicode No :079024R179) | 688.00 | 147.00 |
| | **மொத்தம்** | **5627.00** | **950.00** |

எனவே, மேற்கண்ட பணிகளை கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021–2022 ன் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதியும், நிதி ஒதுக்கீடும் வழங்கிட கோரி பிரேரணையினை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1133, நாள். 13.10.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

2) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் கடிதம் ந.க.எண். 3833/2021/பி1 நாள். 01.10.2021 ல் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (NULM) திட்டத்தின் கீழ் பிரேரணை தயார் செய்து அனுப்பிட தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, கொடைக்கானல் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள அரசு மருத்துவமனை வளாகத்தில் நோயாளிகளுடன் வருபவர்கள் பாதுகாப்பாக தங்கி செல்லும் வகையில் சிறப்பு தங்குமிடம் (Special Shelter) அமைத்திட மதிப்பீடு ரூ. 160.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியும், நிதி ஒதுக்கீட்டினை அரசு மானியமாகவும் வழங்கிட கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பித்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) சிறப்பு தங்குமிடத்திற்கான கட்டிடத்தின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை ஒப்படைந்த நாளிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு ரோட்டரி கிளப் ஆப் கொடைக்கானல் என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்திற்கு வழஙகவும், புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1134, நாள். 13.10.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

3) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான 24 வார்டுகளில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய்கள் மற்றும் தண்ணீர் தேக்க தொட்டிகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்யும் பொருட்டு தேவையான குடிநீர் பணி உதிரி பொருட்கள் வாங்கிக் கொள்ள குடிநீர் கணக்கு நிதியின் கீழ் ரூ. 9.95 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, மதிப்பீட்டின்படி இப்பணியினை மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதியும், செலவினத்தினை குடிநீர் நிதியின் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1135, நாள். 13.10.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

4) இந்நகராட்சியின் 2020–2021ம் ஆண்டிற்கான வருவாய் நிதி, குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதி ஆகிய கணக்குகளை திரு.சீனிவாசன் (consultant) என்பவர் கணினி மூலம் முடித்துக் கொடுத்துள்ளார். மேற்கண்ட கணக்குகளை முடிப்பதற்கான தொகை ரூ.50,000/– திரு. சீனிவாசன் (consultant) அவர்களுக்கு இந்நகராட்சியின் வருவாய் நிதியில் இருந்து வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம். (ந.க.எண்.6284/2015/பி1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1136, நாள். 13.10.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

5) மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண்.29274/2020/NC–1. நாள்.19.8.2021,நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3812/2021/E3. நாள்.2.10.2021. மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் கடிதம் ந.க.எண்.3297/2021/B3. நாள்.4.10.2021 ஆகிய கடிதங்களில் அறிவுறுத்தியுள்ளபடி, கொடைக்கானல் நகராட்சிப் பகுதியில் 1 முதல் 24 வார்டுகளில் உள்ள அனைத்து அரசு கட்டிடங்கள் மற்றும் தனியார் கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு குறித்து ஆய்வுப் பணிகள் மேற்கொண்டு (1) கட்டிடம் அரசு விதிகளின்படி மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைக்கப்பட்டுள்ளது (2) மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு கட்டிடம் பழுதடைந்ததை சீரமைத்தல் (3)மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு புதிதாக ஏற்படுத்துதல் போன்றவற்றை பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அறிவிப்புகள் சார்பு செய்து அதன் விபரத்தினை தினந்தோறும் முன்னேற்ற அறிக்கையாக அனுப்பி வைக்கவும், அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மழைநீர் சேகரிப்பு பணி அரசின் முக்கிய பணி என்பதாலும், மேற்படி குடிநீர் விநியோகம் தொடர்பான பணிகளில் அரசு தனிக்கவனம் செலுத்தி வருவதாலும், இதனை சிறப்பினமாக கருதி கீழ்க்கண்ட விபரப்படியான அறிவிப்புகள் அரசு அங்கீகாரம் பெற்ற திருச்சிராப்பள்ளி தமிழ்நாடு

பல்நோக்கு சேவை கூட்டுறவு அச்சகத்தில் அச்சடித்து பெறவும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ. 1,50,000/–ஐ (ரூபாய் ஒரு இலட்சத்தி ஐம்பது ஆயிரம் மட்டும்) நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | விபரம் | பொருளின் விபரம் | அளவு | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் புதிதாக ஏற்படுத்துதல் / பழுதடைடைந்ததை சீரமைத்தல் | அறிவிப்புகள் | A4 அளவு பேப்பரில் கார்பன் பேப்பர் வைத்து எழுதும் வகையில் | 12000 (பன்னிரெண்டாயிரம் மட்டும்) |

அலுவலக குறிப்பு –1) அரசின் திட்டமான மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு திட்டத்தினை செயல்படுத்த அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி அரசு அங்கீகாரம் பெற்ற திருச்சிராப்பள்ளி தமிழ்நாடு பல்நோக்கு சேவை கூட்டுறவு அச்சகத்தில் அச்சடித்து பெற நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

2) இதற்கு ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ.1,50,000/–ஐ (ரூபாய் ஒரு இலட்சத்தி ஐம்பது ஆயிரம் மட்டும்) பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3) அரசின் முக்கியம் வாய்ந்த பணி என்பதால் மன்றத்தில் அனுமதியை எதிர்நோக்கி அறிவிப்புகள் அச்சடித்து வழங்க விநியோக உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1864/2021/எப்1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1137, நாள். 13.10.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

**6)** கொடைக்கானல் நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும் பராரியாய் சுற்றித்திரியும் தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொண்டு தடுப்பூசி போடவும் அதற்குரிய செலவினத் தொகை நாய் ஒன்றுக்கு ரூ.700/– வீதம் (நகராட்சி 50% மற்றும் விலங்குகள் நலவாரியம் 50% ) செலவு செய்யவும் G.O.No.29, Municipal Administration and Water supply (TP-2) Department, date: 22.01.2013ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, கடந்த 10.5.2019 முதல் கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ள கொடைக்கானல் கால்நடை பாதுகாப்பு அமைப்பு (KSPCA) அவர்களுடன் ABC திட்டத்தினை நகராட்சியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு அரசு நிர்ணய தொகையான ரூ.700/– என்ற வீதத்தில் செயல்படுத்திடவும் மன்றம் அனுமதி வழங்கியுள்ளது. (நகர்மன்றத் தீர்மானம் எண்.672, நாள்.24.09.2019) அதன்படி, மீண்டும் கொடைக்கானல் கால்நடை பாதுகாப்பு அமைப்பு KSPCA அவர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டு பணிகள் மேற்கொள்வதற்கு ABC திட்டத்தினை செயல்படுத்திட ஒப்பந்தத்தினை 3 ஆண்டுகளுக்கு நீட்டித்து புதுப்பித்து தருமாறு விருப்பம் கடிதம் வழங்கியுள்ளார்.

மேற்கண்ட கொடைக்கானல் கால்நடை பாதுகாப்பு அமைப்பு KSPCA நிறுவனத்திற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டு ABC திட்டத்தினை செயல்படுத்திட 3 ஆண்டுகளுக்கு நீட்டித்தும் பணி உத்தரவுகள் வழங்குவதற்கும் இதற்குண்டான செலவு தொகைகளை நகராட்சி வருவாய் நிதயிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. நடைமுறையில் உள்ள அரசாணைகளை பின்பற்றியும், நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக இது குறித்த அறிவுறுத்தல்களை கடைபிடித்தும் KSPCA தொண்டு நிறுவனத்திற்கு மூன்று ஆண்டுகளுக்கு பணி நீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2936/04/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1138, நாள். 13.10.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

7) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான தார்ச்சாலை, சிமிண்ட் சாலை, பேவர் பிளாக் சாலை, தெருவிளக்குகள் மின் கம்பஙகள், வடிகாலின் நீளம், சிறுபாலம் மற்றும் தடுப்பு சுவர் ஆகியவற்றை துல்லியமாக கணித்து அளவீடு செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் ஆய்வு கூட்டம் மற்றும் சுற்றறிக்கையின் வாயிலாக Road Ledger, Map இவை அனைத்தும் GIS உதவியுடன் அமைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள இந்நகராட்சியில் போதுமான தொழில்நுட்ப வல்லுனர்கள் இல்லாத காரணத்தினால் தனியார் வல்லுனர்கள் உதவியோடு மேற்படி பணியினை முடிக்க (Consultancy) மதிப்பீடு ரூ. 9,80,000/– க்கு பொது நிதியின் கீழ் தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு.</u>

1. சாலை, மழை நீர் வடிகால், தெருவிளக்கு மற்றும் நடைபாதை ஆகியவற்றை துல்லியமாக GIS உதவியுடன் அளவீடு செய்து நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு அனுப்பிட வேண்டியுள்ளதால் அவசர அவசியம் கருதி மேற்கெண்ட செலவினத்தினை பொது நிதியின் மூலம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1139, நாள். 13.10.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

8) கொடைக்கானல் நகராட்சி பகுதியில் குடிநீர் விநியோகம் செய்யும் ஆழ்துளை கிணறு மின் மோட்டார்கள் மற்றும் பேனல் போர்டுகளில் அடிக்கடி ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்திடும் பொருட்டு ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கு 05.10.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | கொடைக்கானல் நகராட்சி பகுதியில் சீரான குடிநீர் விநியோகம் செய்ய நகர் பகுதிகளில் உள்ள குடிநீர் ஆழ்துளை கிணறுகள் மின்மோட்டார், பேனல் போர்டு வருடாந்திர பணி செய்தல் | 8.00 | எம்.கென்னடி<br>பி. சுப்பிரமணி | 0.10% குறைவு<br>0.32% அதிகம் |

அலுவலக குறிப்பு. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு எம். கென்னடி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1140, நாள். 13.10.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

9) கொடைக்கானல் நகராட்சி பகுதியில் குடிநீர் நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்வதற்கு 07.10.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1. | குடிநீர் பணிக்கு தேவையான கீழ்க்கண்ட உதிரி பொருட்கள் சப்ளை செய்தல்<br>1) ½” Flow Control Valve -2200 Nos | **9.91** | எம்.கென்னடி | 0.26% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2) ½" G.I. Coupling - 2200 Nos<br>3) ½" G.I. Union 2200 Nos<br>4) ¾ " Flow Control Valve 100 Nos<br>5) ¾ " G.I. Coupling 100 Nos<br>6) ¾ " G.I. Union 100 Nos | | பி. சுப்பிரமணி | 2.51% அதிகம் |

அலுவலக குறிப்பு. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1141, நாள். 13.10.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

ஒம்/–த.நாராயணன்,
தனி அலுவலர்,
கொடைக்கானல் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.